සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

| | | |
|---|---|---|
| ගෘහ ආර්ථික විද්‍යාව I<br>மனைப் பொருளியல் I<br>Home Economics I | 28 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.**

**1.** வடிவமைப்பின் அடிப்படை அம்சங்கள் இரண்டாகும், அவையாவன
(1) கோடுகளும் பெறுமானமும் ஆகும்.
(2) செறிவும் வடிவமும் ஆகும்.
(3) பெறுமானமும் இழையமைப்பும் ஆகும்.
(4) கோடுகளும் செறிவும் ஆகும்.
(5) வடிவமும் இழையமைப்பும் ஆகும்.

**2.** புற வெளி மற்றும் உள்ளக வெளி வடிவமைப்புக் கோட்பாடுகளுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) நீளம், அகலம், உயரம், சுமை, அளவு ஆகியன ஒன்றுக்கொன்று பொருந்துதல் விகிதசமமாகும்.
(2) ஒரே இயல்பை மறைமுகமாகக் காட்டுவது மீள்வரும் சந்தமாகும்.
(3) நிறம், இழையமைப்பு, அளவு ஆகியன ஒன்றையொன்று விஞ்சிச் செல்லும் வகையில் வலிமையை செப்பஞ்செய்து ஒழுங்கமைத்தல் ஒன்றிணைப்பு எனப்படும்.
(4) துணைக்கூறுகளை, நடுப்புள்ளியிலிருந்து சமனற்ற தூரங்களில் தாபித்தல் சமச்சீர்ச் சமனிலையாகும்.
(5) வடிவம், வர்ணம், இழையமைப்பு போன்றன ஒரே விதமாகப் பொருந்தியமைதல் ஒருமைப்பாடாகும்.

**3.** வடிவமைப்பொன்றின் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய மிகவும் பொருத்தமான கூற்று / கூற்றுகளைத் தெரிக.
A - ஒரேமாதிரியான தன்மையிலிருந்து விடுபட்டு நவீன வடிவங்களுடன் கூடிய கட்டடங்களை அமைத்தல்.
B - கட்டடங்களைப் பயன்படுத்துவோரின் உளநிலையை விட அவர்களின் உழைப்பு முன்னிலையாதல்.
C - கட்டடங்களில் ஒளியூட்டற் கட்டமைப்பு, பிரதேச ஒழுங்கமைப்புத் தரங்களுக்கு இசைவாதல்
(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

**4.** ஓவியக் கலைஞர்கள் 'பிபொனாச்சித் தொடரி' எனும் எண்ணக்கருவை எந்த வடிவமைப்புக் கோட்பாட்டிற்காகப் பயன்படுத்தினர்?
(1) சமச்சீரில் சமனிலை (2) ஒன்றிணைப்பு (3) மீள்வரும் சந்தம்
(4) உறுத்தல் (5) விகிதசமம்

**5.** கரும்பு, பால், முளைக்கும் தானியங்கள் ஆகியவற்றில் அதிகம் அடங்கியுள்ள இருசக்கரைட்டுகளை முறையே கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) மோல்ற்ரோசு, கலக்ரோசு, சுக்குரோசு
(2) சுக்குரோசு, லக்ரோசு, மோல்ற்ரோசு
(3) மோல்ற்ரோசு, சுக்குரோசு, லக்ரோசு
(4) சுக்குரோசு, கலற்ரோசு, மோல்ற்ரோசு
(5) குளுக்கோசு, சுக்குரோசு, லக்ரோசு

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



6. மா போசணைப் பொருட்கள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அவித்த முட்டையின் வெள்ளைக்கருவில் உள்ள அல்புமின் திரட்சியடைவதால் புரதத்தின் இயல்பு கெடும்.
(2) அவரையின வித்து வகைகள் முழுமையான புரதத்திற்கான உதாரணங்கள் ஆகும்.
(3) காபன், ஐதரசன் ஒட்சிசன் ஆகியன அனைத்து இலிப்பிட்டுக்களினதும் கூறுகளாகும்.
(4) புவியில் பரவலாகக் காணப்படும் காபோவைதரேற்று மாப்பொருளாகும்.
(5) இலிப்பிட்டுக்கள் உடலின் சில கலங்களில் அடங்கியுள்ள கூறாகும்.

7. நிரம்பிய மற்றும் நிரம்பாக் கொழுப்பமிலங்கள் அதிகமுள்ள உணவுகளை முறையே கொண்டமைந்த விடையைத் தெரிவுசெய்க.
(1) ஒலிவ் எண்ணெய், பன்றியிறைச்சி
(2) பன்றியிறைச்சி, வெண்ணெய்
(3) மீன், சோயா அவரை எண்ணெய்
(4) பன்றியிறைச்சி, மீன்
(5) சோயா அவரை எண்ணெய், ஒலிவ் எண்ணெய்

8. உண்ணத்தகு நார்ப்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - குடலில் உணவு பயணிக்கும் நேரத்தைக் குறைக்கும்
B - பற்றீரியாக்களின் தொழிற்பாட்டின் மூலம் குறுகிய சங்கிலி கொழுப்பு அமிலங்களை உருவாக்கும்
C - குருதியில் அடங்கியுள்ள கொலஸ்திரோலின் அளவைக் கட்டுப்படுத்த உதவும்
இவற்றில் சரியான கூற்றை / கூற்றுகளைத் தெரிக.
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

9. பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
(1) விலங்குமூல உணவுகளிலிருந்து மட்டுமே போலிக்கமிலத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(2) கிழங்கு வகைகளில் ஒட்சியெதிரிகள் அடங்கியுள்ளன.
(3) முட்டைகளில் அனைத்து நீர்ப்பதார்த்த விற்றமின்கள் அடங்கியுள்ளன.
(4) கொழுப்புநீக்கிய பால், விற்றமின் A மூலமாகும்.
(5) ஓமேகா 6 அமிலம் உடலில் உற்பத்தியாவதற்கு வாய்ப்புள்ளது.

10. B தொகுதி விற்றமின் அடங்கிய ஓர் உணவு **அல்லாதது** எது?
(1) தயிர் (2) சோயா அவரை (3) மீன்
(4) காளான் (5) மரக்கறி எண்ணெய்

11. பின்வருவனவற்றில் பெண்ணொருவரில் தொற்றா நோய் அபாயத்தை அதிகரிக்கும் காரணியாக அமைவது எது?
(1) BMI பெறுமானம் 24 ஆகக் காணப்படல்
(2) தவிட்டரிசியை மட்டும் உட்கொள்ளல்
(3) அப்பிள் வடிவில் உடல் அமைந்து காணப்படல்
(4) தாவர உணவுகளை மட்டும் உட்கொள்ளல்
(5) இடை : இடுப்பு விகிதம் 0.7 ஆக இருத்தல்

12. உணவுச் சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களைக் கருதுக
A - பித்தச்சாறு கலத்தல்
B - pH பெறுமானம் 5.6 - 6.9 இடையில் இருத்தல்
C - பாற்கான்கள் காணப்படல்
D - சதையச்சாறு சுரத்தல்
பின்வருவனவற்றில் இலிப்பிட்டின் சமிபாட்டிலும் அகத்துறிஞ்சலிலும் செல்வாக்குச் செலுத்துவன
(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, B, C ஆகியன மாத்திரம்
(3) A, B, D ஆகியன மாத்திரம் (4) A, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகிய அனைத்தும்

PAST PAPERS WIKI

13. இரைப்பையின் தொழிற்பாடு **அல்லாதது** எது?
(1) உணவை அமிலமாக்குதல்
(2) புரதச் சமிபாட்டை நிறைவு செய்தல்
(3) உணவை பொறிமுறையாகக் கலத்தல்
(4) அமைலேசு நொதியத்தைச் செயலிழக்கச் செய்தல்
(5) ஓமோனை உற்பத்தி செய்தல்

[பக். 3 ஐப் பார்க்க

14. பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - நாட்பட்ட குறையூட்டநிலை காணப்படல்
B - அத்தியாவசிய போசணைகளின் தரம் குறைவடைதல்.
C - அத்தியாவசிய போசணைக் கூறுகளின் அளவு குறைவடைதல்.
இவற்றில் குவாசியோகோர் நிலைமை தொடர்பான சரியான விடை
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

15. உணவுக் கூம்பத்திற்கேற்ப உணவுத் தொகுதி மற்றும் அவற்றுக்குரிய நாளாந்த உணவின் அளவுகள் வருமாறு.

| | உணவுத் தொகுதி | நாளாந்த உணவின் அளவு |
|---|---|---|
| A- | சோறு, பாண், தானிய வகை மற்றும் கிழங்கு வகை | 6 - 11 |
| B- | காய்கறி | 3 - 5 |
| C- | பால் மற்றும் பால் உற்பத்திகள் | 2 - 4 |

மேற்குறித்த உணவுத் தொகுதிகள் மற்றும் அவற்றுக்குரிய உணவு அளவுகளைச் சரியாகக் கொண்ட கூற்று / கூற்றுகளாவன
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B ஆகியன மாத்திரம்
(4) A, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

16. மிகையூட்டத்தைத் தவிர்ப்பதற்கு பொருத்தமான வேளை உணவொன்றில் அதிகமாக இருக்க வேண்டிய உணவுச் சோடியினைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க
(1) காய்கறிச் சலாது, பருப்பு வகைகள்
(2) எண்ணெய் கொண்ட வித்துகள், பழங்கள்
(3) மோல்ற் வகைப் பானங்கள், பழங்கள்
(4) எண்ணெய் கொண்ட வித்துக்கள், மோல்ற் வகைப் பானங்கள்
(5) பருப்பு வகைகள், உலர்ந்த பழங்கள்

17. சமையல் முறைகள் தொடர்பான சில கூற்றுகள் வருமாறு,
A - குறைந்த நேரத்தில் சமைத்தல் நடைபெறும்
B - சமைப்பதற்கு சிறிதளவு கொழுப்பு பயன்படுத்தப்படும்
C - உலர் வெப்பத்தின் கீழ் சமைத்தல் நடைபெறும்
D - இறைச்சி, மீன் போன்றன சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும்
இக்கூற்றுகளில் வறட்டலுடன் தொடர்பானது,
(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம்
(3) B, C ஆகியன மாத்திரம் (4) B, D ஆகியன மாத்திரம்
(5) C, D ஆகியன மாத்திரம்

18. ஒரு வகைப் பங்கசுவான அஸ்பர்ஜிலர்ஸ் ஒரைசே *(Aspergillus oryzae)* இனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உணவு பின்வருவனவற்றில் எது?
(1) வினாகிரி (2) சோயா சோஸ்
(3) பழச்சாறு (4) யோகட்
(5) இறைச்சி வகை

19. உணவு நற்காப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - புகையூட்டலின் போது புகையில் காணப்படும் பினோலிக்குச் சேர்வைகள் உணவின் மேற்பரப்பில் படிகின்றன.
B - குளிரூட்டலின்போது நுண்ணங்கிகளின் செயற்பாடு தடுக்கப்படுவதோடு நொதியங்கள் செயலிழக்கப்படுகின்றன.
C - பீப்பா வகை உலர்த்தி திரவ உணவுகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படும்.
D - உணவை சில நிமிடங்கள் நீராவி மூலம் வெளியிடப்படும் வகையில் இருத்தல் மூலம் நீரில் வெளிறச் செய்யலாம்.
இவற்றில் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A, C ஆகியன மாத்திரம் (2) A, D ஆகியன மாத்திரம் (3) B, D ஆகியன மாத்திரம்
(4) A, C, D ஆகியன மாத்திரம் (5) B, C, D ஆகியன மாத்திரம்

[பக். 4 ஐப் பார்க்க

**20.** சுவை மேம்படுத்திகளாக செயற்படும் சேர்வைகள் இரண்டைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.
(1) மொனோ சோடியம் குளுற்றமேற்று (MSG), இனோசினிக் அமிலம்
(2) லெசித்தீன், காமோசின்
(3) புரொபைல்கலேற், மோனோ சோடியம் குளுற்றமேற்று
(4) இனோசினிக் அமிலம், லெசித்தின்.
(5) காமொசின், புரோபைல்கலேற்

**21.** செயற்கை நற்காப்புப் பதார்த்தம் தொடர்பான பின்வரும் விடயங்களுள் **பிழையானதைத்** தெரிவுசெய்க.
(1) உணவின் மீது வளரும் மதுவம் மற்றும் சில பங்கசு வகைகளை நிரோதித்தல்.
(2) ஊடகத்தின் pH பெறுமானம் மற்றும் வெப்பநிலையில் இதன் தொழிற்பாடு தங்கியிருத்தல்.
(3) நைத்திரைற்று மற்றும் நைத்திரேற்று ஆகியன உச்ச நச்சுத் தன்மையைக் கொண்டிருக்கும்.
(4) பென்சோவேற்று, பால் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும்.
(5) சல்பைற்றுக்களை அதிகமாகச் சேர்த்தல் சுவாசத் தொகுதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

**22.** பொதியிடும் பொருட்களில் ஒன்றான பொலிஎதிலின் ரெறித்தலேற்று (PET) தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க
(1) மீளப் பயன்படுத்த முடியாது.
(2) எண்ணெயை ஊடுபுகவிடாது.
(3) இதற்கான உதாரணம் தண்ணீர்ப் போத்தல் ஆகும்.
(4) விலை நியாயமானது.
(5) வலுகுறைந்தது.


**23.** வணிகத் தையல் முறைகளில் நிரந்தத் தையலாகப் **பயன்படுத்தப்படாத** தையல் முறை
(1) மறைப்புத் தையல் ஆகும்.
(2) கைத்தையல் ஆகும்.
(3) லொக்தையல் ஆகும்.
(4) தனிநூல் சங்கிலித் தையல் ஆகும்.
(5) அலைநெளி ஓவர்லொக் தையல் ஆகும்.


**24.** **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தைக்கப்பட்ட ஆடைகள் கைத்தொழிலில் ஆடைகள் பருமட்டான வெட்டிற்குட்படுத்தாமல், இறுதியாக வெட்டுதல் நிகழும் சந்தர்ப்பங்கள் உண்டு
(2) புடைவைகளின் தர பரிசோதனையின்போது நெசவு, சுமை, வெளிற்றலுக்கு தாக்குப்பிடிக்கும் இயலுமை ஆகியவற்றுக்கு பரீசீலனை செய்யப்படல் வேண்டும்.
(3) துணிகளை வெட்டும்போது பயன்படுத்தப்படும் துண்டுகளை வெட்டும் அலகு, வெட்டும்போது துணியிற் குறுக்காக கிடையாகச் செல்லும்.
(4) ஒன்றுக்கு மேற்பட்ட அளவில் நூல்களைப் பயன்படுத்திய சங்கிலித் தையலானது 400 தையல் வகையினுள் அடங்கும்.
(5) மேசைவிரிப்பின் வடிவம் எப்படியிருந்தாலும் கைத்துடைதுண்டு சதுர வடிவமாக இருக்கும்.


**25.** 175 cm நீளமும் 80 cm அகலமும் கொண்ட சாப்பாட்டு மேசைக்கு மேசைவிரிப்பொன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளது. மேசையின் விளிம்புகளின் கீழ் தொங்கும் துணியின் அளவு 30 cm ஆகும். அதற்கேற்ப மேசைவிரிப்பின் அளவாக அமைய வேண்டியது
(1) 175 cm × 80 cm ஆகும்.
(2) 182 cm × 87 cm ஆகும்.
(3) 190 cm × 95 cm ஆகும்.
(4) 205 cm × 110 cm ஆகும்.
(5) 235 cm × 140 cm ஆகும்.


[பக். 5 ஐப் பார்க்க

**26.** அலங்காரத் தையல் முறைகளின் நான்கு உருக்கள் வருமாறு










இத்தையல் முறைகள் முறையே
(1) கம்பளித் தையல், நரம்புத் தையல், சங்கிலித் தையல், நிரப்பு தையல்
(2) சங்கிலித் தையல், நிரப்புத் தையல், கம்பளித் தையல், நரம்பு தையல்
(3) நிரப்பு தையல், சங்கிலித் தையல், நரம்பு தையல், கம்பளித் தையல்
(4) நரம்பு தையல், கம்பளித் தையல், நிரப்பு தையல், சங்கிலித் தையல்
(5) நிரப்பு தையல், நரம்புத் தையல், சங்கிலித் தையல், கம்பளித் தையல்

**27.** சில நார்வகைகளை எரித்தபோது பின்வரும் இயல்புகள் அவதானிக்கப்பட்டன.
A - மஞ்சள் நிறச் சுவாலையுடன் எரிதல், சாம்பல் நிற மென்மையான மீதி எஞ்சியிருத்தல்.
B - சுவாலையிலிருந்து வெளியே எடுக்கும்போது அணைதல், தூளாக்கக்கூடிய சாம்பல் குமிழிகள் எஞ்சியிருத்தல்.
C - எரியும்போது உருகுதல், தூளாக்க முடியாது. இறுக்கமான வட்ட சாம்பல் திணிவு எஞ்சியிருத்தல்.
இந்த மூன்று நார் வகைகளும் முறையே
(1) கம்பளி, டெக்குரோன், அக்ரிலிக்
(2) அக்ரிலிக், பருத்தி, கம்பளி
(3) பருத்தி, கம்பளி, டெக்குரோன்
(4) அக்ரிலிக், டெக்குரோன், பருத்தி
(5) பருத்தி, கம்பளி, அக்ரிலிக்

**28.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - நார் தயாரிக்கும் சந்தர்ப்பத்திலிருந்து புடவை உற்பத்தி வரையான தொழிற்பாடு நெசவுக் கைத்தொழிலுக்குரியதாகும்.
B - நைலோன் மற்றும் பொலியெசுத்தர் நார்களைத் தயாரிக்கும்போது உருக்கி நூற்றற் செயன்முறை பயன்படுத்தப்படும்.
C - சரிவுக்கோட்டு நெசவு சாதா நெசவின் ஒரு வகையாகும்.
D - மினுக்கல் செய்வதற்கு முன்னர் பருத்திநாரின் குறுக்குவெட்டு முகம், வட்ட வடிவாக தோன்றும்.
இவற்றில் சரியானவை,
(1) A, B ஆகியன மாத்திரம்
(2) B, C ஆகியன மாத்திரம்
(3) C, D ஆகியன மாத்திரம்
(4) A, B, C ஆகியன மாத்திரம்
(5) B, C, D ஆகியன மாத்திரம்

**29.** கீழே தரப்பட்டுள்ள பின்னல் எந்த நிருமாணங்களிற்குப் பயன்படுத்தப்படும்?



(1) நுளம்பு வலை, உள்ளாடை
(2) நீச்சல் உடை, நுளம்பு வலை
(3) ரீ சேர்ட், நீச்சல் உடை
(4) ரீ சேர்ட், விளையாட்டு உடை
(5) விளையாட்டு உடை, காலுறை

[பக். 6 ஐப் பார்க்க

**30.** குறும்பாவாடை வடிவமைத்தலுடன் தொடர்பான சில கூற்றுகள் வருமாறு
A - மாதிரியுரு வடிவமைப்பின்போது வேல்மடிப்புக்கான இடைவெளியாக இடை அளவில் ஒரு சென்றி மீற்றரை சேர்த்துக்கொள்ள வேண்டும்.
B - முன்பக்க மாதிரியுருவிற்கு ஒரு வேல்மடிப்பு மட்டும் பயன்படுத்தப்படும்.
C - மாதிரியுரு உருவாக்கத்தின்போது பக்கத்திற்கு இடைக்கு மற்றும் விளிம்புக்கு சமமான தையல் இடைவெளியை விடல் வேண்டும்
D - பின் மத்தி இடைதிறப்புத் கொழுக்கி பிடித்ததன் பின்னரே பின்பக்க திறப்பு வெட்டைத் தைத்தல் வேண்டும்.
இவற்றில் சரியானவை
(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம் (3) B, D ஆகியன மாத்திரம்
(4) A, C, D ஆகியன மாத்திரம் (5) B, C, D ஆகியன மாத்திரம்

**31.** தொழிலொன்றிற்கு ஆடை அணிகலன்கள் (Dress code) ஏன் மிகவும் முக்கியமானதாகும்?
(1) கவர்ச்சித்தன்மையை வெளிப்படுத்துவதற்காகும்.
(2) உடம்புக்கு மிகவும் நன்றாக இருக்கும் என்பதாலாகும்.
(3) ஆளுமையை வளர்த்ததுக் கொள்வதற்காகும்.
(4) தனிநபர் அடையாளத்தை வெளிப்படுத்துவதற்காகும்.
(5) நவீன பாணிகளுக்கு இசைவடைவதற்காகும்.

**32.** நேர்முகப் பரீட்சையொன்றிற்கு முகங்கொடுத்தலுடன் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - உங்களிடம் உள்ள ஆற்றல்களை மட்டும் கூறுதல் வேண்டும்.
B - மூடிய வகைக் கேள்விகளின்போது உங்களிடம் இருக்கும் திறமைகளை விவரித்துக் கூற வேண்டும்.
C - நேர்முகப் பரீட்சை முடிவில் நன்றி தெரிவித்தல் வேண்டும்.
D - தொழிலுக்கேற்ப உங்களுக்கு தேவையான சம்பள அளவைக் கூறுதல் வேண்டும்.
இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) D மாத்திரம்
(3) A, D ஆகியன மாத்திரம் (4) B, C ஆகியன மாத்திரம்
(5) C, D ஆகியன மாத்திரம்

**33.** ஓய்வு மற்றும் இன்பப் பொழுதுபோக்கு தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - ஓய்விற்கான செயற்பாடுகளைத் தெரிவுசெய்வதில் சமூகப் பின்னணி செல்வாக்குச் செலுத்தாது.
B - இன்பப் பொழுதுபோக்கு வகைப்படுத்தப்படுவது உடற் தொழிற்பாடுகள் மற்றும் சேவைத் தொழிற்பாடுகள் எனவாகும்.
C - உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனால் களிப்புடன் பொழுதைக் கழிப்பதற்கான கேள்வி அதிகரிக்கும்.
இவற்றில் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

**34.** சுற்றுலா தொடர்பான **பிழையான** கூற்று எது?
(1) ஆளிடைத் தொடர்புகள் முன்னேற்றமடைவது சமூகத்திற்குக் கிடைக்கும் நன்மையாகும்.
(2) கணினி அறிவு மற்றும் மொழிபெயர்ப்பு சேவையினால் மொழிப் பிரச்சினைகள் தீரும்.
(3) உபசரணையாளரிடம் தாழ்வு மனப்பான்மையும் விருந்தினரிடையே உயர்வு மனப்பான்மையும் தோன்றும்.
(4) நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் சமூகத்தில் உருவாகும்.
(5) ஓய்வு நேரத்தில் மேற்கொள்ளப்படுவதால் களிப்புடனான செயற்பாடாகும்.

**35.** மனிதனால் கட்டுப்படுத்தப்பட்ட கவர்ச்சிக்கான உதாரணம்,
(1) தாமரைக் கோபுரமாகும்.
(2) தெகிவளை விலங்கினக் காட்சியகமாகும்.
(3) ஹந்தான மலைத்தொடராகும்.
(4) வில்பத்து தேசிய வனப் பூங்காவாகும்.
(5) டெவோன் நீர்வீழ்ச்சியாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

**36.** பயணத்துடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - சுற்றுலாப் பயணிகளின் புதிய போக்காக அமைவது தூர நாடுகளில் விடுமுறையைக் கழித்தலாகும்.
B - பல்வேறு கலாசாரங்கள் தொடர்பாக விளங்கிக்கொள்ளல் சுற்றுலாவின் நேர்மறையான தாக்கமாகும்.
C - ஆசிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை சுற்றுலாக் கைத்தொழில் வலுவடைவதற்கு காரணமாகும்.
இவற்றில் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, C ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

**37.** நீர் நுகர்வு தொடர்பான சில கூற்றுகள் வருமாறு
A - இலங்கையில் கைத்தொழில்களுக்கான மொத்த நீர் நுகர்வில் சுமார் 23% செலவாகின்றது.
B - நீரின் பொருத்தப்பாட்டை சோதனை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் பௌதிக பரிசோதனையின் மூலம் நீரின் வெப்பநிலை, திண்மப் பதார்த்தச் செறிவு மற்றும் அதன் pH பெறுமானம் என்பன பரிசோதிக்கப்படும்.
C - மழைநீர் துணிகளை கழுவுவதற்குப் பொருத்தமானதாகும்.
D - மலசலகூடங்களின் கழிவுநீர் அழுகற் தொட்டியில் பற்றீரியாக்களால் நீர் மற்றும் வாயுக்களாக மாற்றமடையும்.
இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, D ஆகியன மாத்திரம் (3) B, C ஆகியன மாத்திரம்
(4) A, C, D ஆகியன மாத்திரம் (5) B, C, D ஆகியன மாத்திரம்

**38.** வீட்டுமின் விநியோகத் தொகுதியுடன் தொடர்பான **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தேசிய மின்வலுத் தொகுதியில் ஓரவத்தை மின் 230V ஐயும் 50HZ ஐயும் கொண்டது.
(2) வீட்டு மின்சுற்றொன்றுக்கு உயிர்க் கம்பியின் மூலம் வழங்கப்படும் மின் முதலில் எச்ச ஓட்ட சுற்றுடைப்பான் ஊடாகப் பாயும்.
(3) பழைய வகை வீட்டு மின்சுற்றுக்களில் உருகிகள் எல்லாம் ஒரு விநியோகப் பெட்டியினுள் பொருத்தப்பட்டிருக்கும்.
(4) வீட்டு மின்விளக்குச் சுற்றுகளில் 6A யும் குதைச்சுற்றுக்களில் 13A நுண் சுற்றுடைப்பான் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(5) விளக்குச் சுற்றுக்களில் ஒவ்வொரு மின்குமிழினதும், ஆளி உயிர்க்கம்பியுடனேயே தொடர்புபடுத்தப்பட்டிருக்கும்.

**39.** பின்வருவனவற்றில் எது மின்னுடன் தொடர்புடைய அலகான 'உவாற்று' மூலம் கணிக்கப்படுகின்றது?
(1) அழுத்த வேறுபாடு (2) ஓட்டம் (3) வலு
(4) வோல்ற்றளவு (5) தடை

**40.** மின் உபகரணங்களுடன் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - மின் உபகரணத்தைப் புவித்தொடுப்புக் கம்பியூடாக தொடர்புபடுத்துவதன் மூலம் உபகரணத்தைப் போன்றே பயன்படுத்துபவரும் பாதுகாப்பைப் பெறலாம்.
B - செருகிகளுடன் தொடர்புபடும் நொதுமல் கம்பி நீல நிறமானதோடு உயிர்க்கம்பி கபில நிறமானது.
C - நீரைக் கொதிக்க வைப்பதற்கு அமிழ்ப்பு வெப்பமாக்கி மிகவும் பொருத்தமானது.
இவற்றில் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

**41.** மழைவீழ்ச்சி அதிகரிப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் இரண்டு
(1) ஒளித்தொகுப்பு குறைதலும் கொள்ளை நோய்கள் அதிகரித்தலும்
(2) உயிரினங்கள் அழிவடைலும் மண்ணரிப்பு அதிகரித்தலும்
(3) கொள்ளை நோய்களின் அதிகரிப்பும் ஒளிச்செறிவு அதிகரித்தலும்
(4) ஒளித்தொகுப்பு குறைதலும் உயிரினங்கள் அழிவடைதலும்
(5) ஒளிச்செறிவு அதிகரித்தலும் மண்ணரிப்பு அதிகரித்தலும்

**42.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக
A - ஓட்ஸ் - கொலஸ்திரோல் மட்டத்தைக் கட்டுப்படுத்தல்.
B - பசுந்தேயிலை - நீரிழிவைக் கட்டுப்படுத்தல்
C - திராட்சைச்சாறு - இதய ஆரோக்கியம்
இவற்றில் தொழிற்பாட்டு உணவுகள் அதனை நுகர்வதனால் கிடைக்கும் நன்மைகளைச் சரியாகக் கொண்ட கூற்று / கூற்றுகளாவன
(1) B மாத்திரமாகும். (2) A, B ஆகியன மாத்திரமாகும்.
(3) A, C ஆகியன மாத்திரமாகும். (4) B, C ஆகியன மாத்திரமாகும்.
(5) A, B, C ஆகிய அனைத்தும் ஆகும்.

[பக். 8 ஐப் பார்க்க

**43.** இவற்றில் பரம்பரையலகு திரிவுபடுத்தப்பட்ட உணவு எது?
(1) சோளம் (2) அவரை (3) பறங்கிக்காய்
(4) கிழங்கு (5) நெல்லிக்காய்

**44.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - இயற்கையாக உற்பத்தியாகும் தன்மை இருத்தல்
B - பயன்படுத்தப்படும் வேகத்தினைவிட குறைந்த வேகத்தில் உற்பத்தியாதல்
C - குறுகிய காலத்தில் இயற்கையான உற்பத்தி செயன்முறை மூலம் மீள ஈடுசெய்ய முடியும்
இவற்றுள் மீள உருவாக்கத்தக்க வளங்களின் இயல்பு / இயல்புகளாவன,
(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

**45.** கட்டிளமைப் பருவத்தை 10 - 20 வயதுக் காலப்பகுதியாக வரைவிலக்கணப்படுத்திய உளவியலறிஞர் யார்?
(1) ஜீன் பியாஜே (2) சிக்மன்ட் புரொய்ட் (3) ஹெசல்
(4) ஹார்லோக் (5) ஸ்ரொட்

**46.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - இனப்பெருக்க ஓமோனின் உற்பத்தி ஆரம்பமாதல்.
B - தசைநார்களின் வளர்ச்சி விரைவாக நடைபெறுதல்.
C - பருவமடையும் வயது 11-15 வயதுக்கு இடைப்பட்டதாயிருத்தல்
D - உயர அதிகரிப்பு 10-14 வயதுக்கிடையில் நடைபெறும்
இவற்றில் கட்டிளமைப் பருவ பெண் பிள்ளைகளுடன் தொடர்பான கூற்றுகளுள் சரியானது / சரியானவை
(1) A, B ஆகியன மாத்திரமாகும். (2) A, D ஆகியன மாத்திரமாகும்.
(3) B, C ஆகியன மாத்திரமாகும். (4) A, C, D ஆகியன மாத்திரமாகும்.
(5) B, C, D ஆகியன மாத்திரமாகும்.

**47.** சமநிலை ஆளுமை கொண்ட ஒருவரின் சில பண்புகள் வருமாறு, இவற்றில் மனவெழுச்சிச் சமநிலையை வெளிப்படுத்தும் பண்பு யாது?
(1) முன்வரும் ஆற்றல்
(2) சூழலுக்கு இசைவாக நடந்துகொள்ளல்
(3) பிரச்சினைக்குரிய நிலைமைகளுக்கு ஈடுகொடுத்தல்
(4) அனைவராலும் விரும்பப்படுதல்
(5) சுறுசுறுப்பாக வாழ்தல்

**48.** உளநலம் பாதிக்கப்பட்ட பிள்ளையிடம் காணப்படக்கூடிய இரண்டு உடல் உள நிலைமைகளாவன,
(1) தலைவலியும் வயிற்றுவலியும்
(2) தடிமனும் காய்ச்சலும்
(3) காய்ச்சலும் தலைவலியும்
(4) வாந்தியும் இருமலும்
(5) வயிற்றுவலியும் தடிமலும்

**49.** பின்வரும் கூற்றுகளில் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சரியான வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கிருப்பன வணிக விபரமும் விற்பனை விபரமுமாகும்.
(2) விளைதிறனென அழைக்கப்படுவது உள்ளீடுகள் வெளியீடுகளாக மாறும் விகிதமாகும்.
(3) போட்டிப் பகுப்பாய்வு என்பது SWOT - பபசச பகுப்பாய்வைவிட மேம்பட்ட செயன்முறையாகும்.
(4) வணிகமொன்றின் விளைதிறனை அதிகரிப்பதற்கு கைசன் எண்ணக்கருவைப் பயன்படுத்த முடியும்.
(5) வணிகமொன்றின் விளைதிறனுடனான தொடர்புகளை கருத்தில் கொள்ள வேண்டிய தேவைகள் நான்காகும்.

**50.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - முயற்சியாண்மைக்கு இரண்டு முக்கிய பணிகள் முக்கியமானதாகும்.
B - வணிகமொன்றில் ஈடுபடும்போது நுகர்வுத் தேவைகளை நிறைவேற்றுதல் வெளியக நெறிமுறையாகும்.
C - 'மக்லெலன்' எடுத்துக்காட்டியுள்ளதற்கு இணங்க முயற்சியாண்மையாளர்களிடத்தே மூன்று உந்தல்கள் உள்ளன.
D - சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கம் காரணமாகவே சமூகமொன்றில் முயற்சியாண்மையாளர்கள் பிரதானமாக உருவாகின்றனர்.
இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) D மாத்திரம் (5) C, D ஆகியன மாத்திரம்

* * *

Past Papers Wiki



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

| | |
|---|---|
| ගෘහ ආර්ථික විද්‍යාව | II |
| மனைப் பொருளியல் | II |
| Home Economics | II |

**28 T II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

✳ **முதலாம்** வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்குக.

**1.** (i) வீட்டின் கூரையை நிருமாணிக்கும் போது பயன்படுத்தக்கூடிய வெப்பக் காவலிப் பதார்த்தங்கள் **இரண்டு** எழுதுக.

(ii) மின் விநியோகத்துடன் தொடர்புடைய 'தனியாக்கி' யை அறிமுகம் செய்க.

(iii) விற்றமின் D மற்றும் விற்றமின் E ஆகியவற்றின் இரசாயனப் பெயர்களை முறையே எழுதுக.

(iv) மனித உடலில் இரும்பு அகத்துறிஞ்சலை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தும் **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக.

(v) தனிநபர் பாதுகாப்பிற்கான துணி வகைகள் மற்றும் ஆடைகளுக்குப் பயன்படுத்தும் **இரண்டு** நேர்த்தியாக்கல்களைக் குறிப்பிடுக.

(vi) தைக்கப்பட்ட ஆடைகளின் தரம் தொடர்பாக தாக்கம் செலுத்தும் **இரண்டு** விடயங்களை எழுதுக.

(vii) சுற்றுப் பயணத்தின் பிரதான பிரிவுகள் இரண்டாகும். அவற்றைப் பெயரிடுக.

(viii) சுற்றுச் சூழலுக்கு உகந்த பயிர்ச்செய்கையொன்றை நடைமுறைப்படுத்தும்போது பயன்படுத்தும் **இரண்டு** பதார்த்தங்களை எழுதுக.

(ix) இலத்திரனியல் தொடர்பாடல் ஊடகங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(x) பெண் மற்றும் ஆண் பிள்ளைகளுக்குப் பொதுவான துணைப்பால் இயல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) 'இழிவளவு சக்தி நுகர்வு' என்பதனை வரையறுக்க. (02 புள்ளிகள்)

(ii) உள்ளகச் சுற்றாடலுக்குப் பொருத்தமான வகையில் இயற்கையான ஒளியூட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் **நான்கு** முறைகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) விளக்குக

(a) ஒப்பமான நிலத்தோற்றம்

(b) பௌதிக அச்சுகள் (04 புள்ளிகள்)

(iv) (a) சக்தி மூலங்களின் பிரதான வகைகள் இரண்டாகும். அவற்றைப் பெயரிடுக. அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் வீதம் எழுதுக.

(b) உயிர் வாயு தயாரிக்கும் முறையை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**3.** (i) உணவு நஞ்சடைவதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) 1-5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு உணவு வழங்குதல் தொடர்பான போசணை ஆலோசனைகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iii) இரைப்பை அழற்சி ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் **நான்கு** காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) உயர் குருதியமுக்கம் கொண்ட நோயாளிக்கு ஒரு நாளுக்கான உணவுப் பட்டியலைத் திட்டமிடுக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**4.** (i) உணவின் ஒட்சியேற்ற / தாழ்த்தல் அழுத்தம் நுண்ணுயிர் வளர்ச்சியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது? (03 புள்ளிகள்)

(ii) உணவு நற்காப்பிற்குப் பயன்படுத்தும் உயிரிரசாயன முறையொன்றைப் பெயரிடுக. அதன் மூலம் உணவு நற்காப்பு நிகழும் முறையை உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) சிறுகுறிப்பு எழுதுக.

(a) கிருமியழித்தல்

(b) பிரசாரண நீரகற்றல் (08 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**5.** (i) புடைவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் தொழினுட்ப முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உற்பத்திச் செயன்முறை மற்றும் கட்டமைப்பிற்கேற்ப புடைவைகளின் வகைப்படுத்தலை முன்வைக்குக. அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) வட்டவடிவ மேசைக்காப்புத்துண்டின் விளிம்பை பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான **இரண்டு** முறைகளைப் பெயரிட்டு, அவற்றில் **ஒரு** முறையை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) விளக்குக.

(a) புடைவைகளுக்கு வர்ணம் தீட்டுதல்

(b) அப்பிளிக்கே வேலை (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**6.** (i) சுற்றுச் சூழலில் பச்சைவீட்டு வாயுவின் அளவைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய **மூன்று** வழிமுறைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் திரவக் கழிவுகளினால் சுற்றாடலுக்கு ஏற்படும் **மூன்று** தாக்கங்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (a) 'இன்பப்பொழுது போக்கு' என்பதை வரையறுக்க. (02 புள்ளிகள்)

(b) இன்பப்பொழுது போக்கைக் கழித்தலின் முக்கியத்துவத்தை **மூன்று** காரணிகள் ஊடாக விளக்குக. (03 புள்ளிகள்)

(iv) கல்விச் சுற்றுலா மாணவர்களுக்கு முக்கியமானதாகும். இதனைக் கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**7.** (i) 'ஆளுமை' என்பதனை அறிமுகம் செய்க. (03 புள்ளிகள்)

(ii) சமநிலையான ஆளுமை கொண்ட ஒருவரிடம் நிலவும் 'உளச் சமநிலை' என்பதால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)

(iii) கட்டிளமைப் பருவம் மாற்றமுறும் காலகட்டமாகும். அதனால் பிள்ளை பெரும்பாலும் மனவெழுச்சி சமநிலையற்ற நிலையில் காணப்படுவார். இதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மனவழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் இளவயதுப் பிள்ளையொருவரை அதிலிருந்து விடுவிப்பதற்கு செயற்பட வேண்டிய முறையைக் கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**8.** பின்வரும் தலைப்புகளில் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) காலம் மற்றும் வெளிக்கு ஏற்றவாறான கட்டட வடிவமைப்பு

(ii) வேளை உணவுகளில் தானியங்கள் மற்றும் தானிய உற்பத்திகளை உள்ளடக்குதல்

(iii) மாதிரியுருவைப் பயன்படுத்தி பாவாடையை வெட்டிக்கொள்ளும் விதம்

(iv) இலங்கைச் சுற்றுலாக்கைத்தொழிலின் தற்போதைய நிலைமை

(v) கட்டிளமைப் பருவத்தில் சமூக வளர்ச்சியை பிரதிபலிக்கும் பண்புகள் ($04 \times 4 = 16$ புள்ளிகள்)

PAST PAPERS WIKI
www.PastPapers.Wiki
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library